தவத்திரு

சிவகாமி பரதேசி அம்மையார்

வரலாறு

Q25:58.2197
N8
220477

உ

முருகன் துணை

முன்னுரை

இறைவன் திருவிளையாடல்கள் புரிந்த புண்ணிய நாடாகிய பாண்டிய நாட்டின் தென் பகுதியாக விளங்குவது நெல்லை மாவட்டம் ஆகும். அகத்தியர் தமிழ் உபதேசம் செய்த பொதிகை மலையில் தோன்றும் தாமிரபரணிநதி, நெல்லை மாவட்டத்திற்கு எழிலையும் செல்வச் செழிப்பையும் வாரி வழங்குகிறது அத்தகைய சிறப்பு வாய்ந்த பொதிகை மலைக்கு, வடமேற்குத் திசையில் அமைந்திருக்கும் அழகிய குன்றம் திருமலை அத்திருமலை. உச்சியில் பிறவிப்பிணிகளைப்போக்கும் அருமருந்தாக குடியிருக்கிறான் "கருணைக்கடவுள்" கலியுக வரதன்.

இறைவனின் அருட்சிறப்பு அவன் அடியார்கள் மூலம் அறியப்படுகின்றது திருமலை முருகனின் அருள் பெற்ற அடியார்கள் பலர். பாலமுருகனுக்கு தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து, பல திருப்பணிகள் செய்தும், வஞ்சகர்களிடமிருந்து சொத்துக்களை மீட்டும், பல அற்புதச்செயல்கள் செய்தும் ஆறுமுகனின் அருளை உலகறிய செய்தும் அவன் அடி சேர்ந்த சிவகாமி அம்மையின் புனித வரலாறே இச்சிறு நூல்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று".

— என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்பத் தோன்றி, தொண்டு செய்து திருவருள் பெற்ற திறம் எண்ணி எண்ணி இறும்பூ தெய்தலாம் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்றார் அப்பர் சுவாமிகள் அதற்கேற்ப தன்னலங்கருதாது தனிப்பெரும் தொண்டு செய்த திறத்தினை அறிந்து அம்மையார் அடைந்த பேற்றினை அன்பர்கள் பெறுவார்களாக.

இந்நூலினை எழுதிய புளியறை திரு. B. சேதுராமலிங்கம் பிள்ளை M. A. அவர்களுக்கும் சில வரலாற்றுச் செய்திகளைச் சேகரித்துத்தந்த பைப்பொழில் திரு பாரதிகணேசன் அவர்களுக்கும இவ்வரலாற்றை நிரல்பட, சீரிய முறையில் அமைத்துத் தந்த அன்பு நண்பர் திருநெல்வேலி. ம. தி. தா. இந்துக் கல்லூரி மேல்நிலைப்பள்ளி தமிழ் ஆசிரியர் திரு. K. பாலசுப்பிரமணியன் B.A;B.Ed; அவர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

N. சிவனாண்டி B. A;
நிர்வாக அதிகாரி

பண்பொழி
30—4—1981.

Q 25:38.2119 N81

220477

1981

திருக்கோயில் வெளியீடு

பண்பொழி.

சிவகாமி பரதேசி அம்மையார் வரலாறு

பழம்பெருமை வாய்ந்த பாண்டி நாட்டின் தென் பகுதியே நெல்லை மாவட்டம். மஞ்சுசூழ்மலை வளமும், வானுற நிமிர்ந்து நிற்கும் நெடுமரமும், கஞ்ச மலர விழ் கழனிசூழ் பைம்பொழிலும், அஞ்சாநெஞ்சமும், குன்ற வலிமையும் உடைய மறவர் இனமும், அஞ்சுக மொழி பேசி கொஞ்சி குலவிடும். கோதையர் குலமும் குலவி வாழும் மாவட்டம் நெல்லை மாவட்டம். பொதிகைத்தாயின் பூந்தென்றல் கரங்களில் தவழ்ந்து விளையாடிப் புதுப் புனலாய் பொங்கிவரும் கன்னி இளம் மானும் பொருநைப் பெண்ணாளின் தண்மை என்னும் தனிச்சிறப்பால் தழைத் தோங்கிய மாவட்டம் நெல்லை மாவட்டம் அது மட்டுமா? பாட்டுக்கொரு புலவனையும் செக்கிழுத்த செம்மலையும், தமிழ் மண்ணுக்காக தன்னுயிர்தந்த தன்னிகரில்லாத் தலைவன் வீரபாண்டிய கட்டப்பொம்மனையும் ஈந்தது நெல்லை மாவட்டமே. இந்த நல்லறிஞர்களையும், கலைஞர்களையும், கவிஞர்களையும், ஈன்றெடுத்த நெல்லைத் தாயின் மடியில்தான் தத்துவச்செம்மல்களும் தன்னலம் பேணு ஞானிகளும், இப்புவியின் இயக்கம் எது வெனக்கண்டறிந்த இறைவழிச் செல்வர்களும் தவழ்ந்து விளையாடினர் தந்துவம் பல கண்டனர். இத்தகைய தவசீலர்களின் வரிசையில் உதித்த நன்முத்தே "சிவகாமி அம்மையார்" ஆவார்.

தோற்றம் :-

நெல்லை மாவட்டத்தில் தென்காசி வட்டத்தில் சீரும் சிறப்புமாய் இயற்கைப்பொலிவுடன் விளங்கும் அழகிய சிற்றூர் நெடுவயல் ஆகும். பைம்பொழில் கிராமத்திலிருந்து வடகிழக்குத் திசையில் 8 கி. மீ. தூரத்தில் உள்ளது. நெடுவயல் கிராமம். நிலவளம், நீர்வளம் யாவும் ஒருங்கே அமையப்பெற்ற நல்ல ஊராகும். முக்குலத்தைச் சேர்ந்த வீர-மறவர் குடியாம்

கொண்டையங் கோட்டார் என்னும் கொடிமரபில், மறவர் குல சமுதாயப்பிரதானிகளில் ஒருவரும், பெரு நிலக் கிழாருமான முத்துச்சாமித்தேவர் என்பவருக்கும் குழல் வாய்மொழி அம்மையாருக்கும் சுமார் 190 ஆண்டுகளுக்கு மூன்பு தெய்வீகப் பேரொளியாய் அவதரித்தார்.

திருமணம்:-

பெற்ருேர் குழந்தை சிவகாமியை சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தனர். முத்துசாமித்தேவர் என்பவர் "பெரிய பண்ணை'' என்று அவ்வூர் மக்களால் அழைக்கப் படுபவர். அவருக்கு ஏராளமான நிலபுலன்கள், வீடுவாசல் போன்றச் சொத்துக்கள் உண்டு. அவர்கள் பண்ணை வேலையாளாக "சங்கிலிமாடன் பகடை" என்பவன் பணி புரிந்து வருகிருன். சங்கிலி மாடன் சிவகாமியை நன்கு பேணி, வளர்ப்பான். முகையாய், அரும்பாய் மலராய் அவிழ்ந்து மணம் பரப்பும் மடந்தை பருவத்தை அடைந் தாள் சிவகாமி. உடனே பெற்ருேர் முத்துசாமித்தேவரும் குழல்வாய் மொழி அம்மையாரும் கலந்து ஆலோசித்து அதே ஊரில் உள்ள சின்னப்பண்ணை சங்குமுத்துத் தேவர்-உத்தமி அம்மாள் ஆகியோரது புதல்வன் சங்க முத்துத் தேவர் என்பவருக்கு சிவகாமியை திருமணம் செய்து கொடுக்கத் தீர்மானித்தனர் பழனி மூப்பனர் என்பவர் பெரிய பண்ணை வீட்டிற்கு காய்கறி முதலிய சாமான்கள் கொடுத்து வருகிருர். அவரிடம் திருமணத் திற்கு வேண்டிய சகல பொருட்களையும் தயாரித்து கொண்டுவரும்படி பெரிய பண்ணை கூறினர். அதன் படியே திருமணம் விமரிசையாக சங்கமுத்துத் தேவருக் கும் சிவகாமிக்கும் நடைபெறுகிறது.

இல்வாழ்க்கை:-

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

— என்ற தெய்வப்புலவரின் பொய்யா மொழிக் கேற்ப, சிவகாமியும், கங்கமுத்துத்தேவரும் இல்லறம் என்னும் நல்லறத்தை சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

குழந்தைப்பேற்றுக்கு ஏங்குதல்:-

சிவகாமி அம்மையார் சிறந்த குடும்பப் பெண்ணாய் விளங்கியதோடு தெய்வபக்தியிலும் ஈடுபட்டு மனமாசற்று வாழ்ந்தார். அடியார்களைப் பேணுதல், அவர்களுக்கு அன்னமிட்டு உபசரித்தல் முதலிய அறச்செயல்களைத் தன் கணவனுடைய ஒத்துழைப்புடன் நிறைந்த மனதோடு செய்து வந்தார். ஆண்டுகள் பலவாகியும் இவர்களுக்கு மகப்பேறு கிடைக்கவில்லை. தமக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க வேண்டுமென்ற ஆர்வத்தில் இவ்விருவரும் அறச்செயல்களையும், தெய்வ வழிபாடுகளையும் நாள்தோறும் நடத்தி நோன்புகள் நோற்று, இறைவன் கருணைக்கு இறைஞ்சி, நின்றார்கள்.

"அமிழ்தினும் ஆற்ற இனிதே தம் மக்கள்
சிறுகை அழாவிய கூழ்".

—என்ற உலக பொது மறைக்கேற்ப, குழந்தைப் பாக்கியம் வேண்டிப்பல தெய்வ கைங்கரியங்கள் செய்தனர். நெடுவயல் கிராமத்தில் அடியார்களும், அகதிகளும் தங்குவதற்கு தம் சொந்தச் செலவில் கல் மண்டபம் கட்டி வைத்தார். இன்றும் அந்த மண்டபம் நெடுவயலில் உள்ளது.

வாலர் மஸ்தான் :-

இவ்விதம் சிவகாமி அம்மையாரால் நிறுவப்பட்ட மண்டபத்தில் 'வாலர் மஸ்தான் என்னும் ஒரு இஸ்லாமிய பெரியார் வந்து தங்கலானார். அவர் உண்மையிலேயே இறைவன் அருள்பெற்ற துறவி. சித்துக்கள் செய்யும்

வல்லமையுடையவர். சிவகாமி அம்மையார் வாலர் மஸ்தானுக்கு மிகுந்த பயபக்தியுடன் பணிவிடைகள் செய்து அன்னமுமிட்டு வந்தார். அப்பெரியார் யாருடனும் அதிகமாக பேசமாட்டார். சிவகாமி அம்மையாருடைய உபசரணைகளை வேண்டா வெறுப்புடன் ஏற்றுக் கொண்டாரே தவிர. அம்மையாருடைய மனக்குறையைப் பற்றி கேட்கவோ அக்குறை நீங்கும் மார்க்கத்தைப் பற்றி சொல்லவோ இல்லை. சிவகாமி அம்மையாரும் அவர் கணவரும் பலவிதமாய் தெய்வ கைங்கரியத்தில் தம் மனம் போனபடி தங்கள் உடைமைகளை செலவு செய்கிறார்களே என்று அவர்களுடைய உறவினர்கள் சீற்றம் கொண்டார்கள். இவ்வுத்தம தம்பதிகள் அதைப்பொருட்படுத்தவில்லை.

கற்பின் கனலி :-

சிவகாமியம்மையாருக்கும் அவர் உறவினர்களுக்கும் இடையே உள்ள மனக்கசப்பும், வெறுப்பும் முற்றியது ஒருசமயத்தில் அவர்கள் பலர் சேர்ந்து அம்மையாரைப் பார்த்து பழித்து, இழித்துப்பேசி இல்லாத பொல்லாதனவற்றை சொல்லி அவமானப்படுத்தினார்கள். சிவகாமி அம்மையார் மனங்கொதித்து பழிச்சொற்களைத் தாங்க மாட்டாராய் தன்னை பழித்துப்பேசிய சிறியோர்களை ஆவேசத்துடன் பார்த்து "கற்புநிலை தவருது" களங்கமற்ற மனதோடு குலமகள் நிலைகடவாது அறத்தொண்டு புரிந்திருப்பேன் ஆனால நான் இத்தெருவின் மேலக்கோடி திரும்புமுன் இங்கு இடிவிழுந்தாகட்டும் என்று சபித்து விட்டார். சில விநாடிகளிலேயே அந்த இடத்தில பட்டப் பகல் நேரத்தில் முன் அறிகுறிகளின்றி வெள்ளிடி இடித்து ஒரு வீடு நாசமானதைக்கண்டு அவ்வூர் மக்கள் அஞ்சினர். அதிர்ச்சியடைந்தனர் சிவகாமி அம்மையாரின் தெய்வீகத் தன்மையை உறவினர்களும் உணர்ந்து அடங்கினார்கள். இடியினால் சேதமடைந்த வீட்டை புதுப்பிக்கப்பட்டமை நிலைமையில் இன்றும் அங்கு காணலாம்.

வாலர் மஸ்தான் சிவகாமி அம்மையைத் திருமலை செல்லும்படி கூறியது :-

இந்த அற்புத நிகழ்ச்சிக்குப் பின், மிகுந்த மனக் குழப்பத்துடனும், வேதனையுடனும் அம்மையார் தான் போற்றி வணங்கும் வாலர் மஸ்தான் சுவாமி முன்னிலையில் தன் கணவருடன் சென்று தலை வணங்கி நின்றார்கள். 'அம்மகான்' சிவகாமி அம்மையாரைப்பார்த்து. உன் மனக்குறை எனக்குத் தெரியும். ஆனால் கருத்தாங்கி குழந்தை பெறும் பாக்கியம் உனக்கில்லை. மேற்குத் திசையில் குன்றின் மேல் கோலாகலத்துடன் வீற்றிருக்கும் திருமலைக்குமாரன் தான் உனது தவக்குழந்தை. இன்றே அவனிடம போகவும்! அவனைப் பேணிப்போற்றி அவனது உடைமைகளை பாதுகாக்க உனது சேவை அங்கு தேவை என்று சொல்லி மனம் போல் வாழ்வு என்று வாழ்த்தி அம்மையாரையும், அவரது கணவரையும் அனுப்பினார். அப்பெரியாரும் அவ்வூர் விடடு அகன்றார் என்பர்.

திருமலைக்குச் சென்றது -

வாலர்மஸ்தான் சுவாமியினுடைய கட்டளையை சிரமேற்க் கொண்டு சிவகாமி அம்மையாரும், கணவர் கங்கமுத்துதேவரும் பண்ணையாள் சங்கிலி மாடன் பகடையும் தாமதமின்றி திருமலைக்குச் சென்றனர். அக் காலத்தில் இததிருத்தலம் முட்செடிகளும், மூங்கில் புதர் களும் நிறைந்த காடுகளால் சூழப்பட்டு பொல்லாத விலங்குகளின் புகலிடமாய் இருந்தது. போக்கு வரத்துக்கு நேரான சீரான பாதைகள் இல்லை. பகல் நேரத்திலும் கூட அங்கு போவதற்கு பயமாயிருக்கும் மலைமேல் ஏறிச் செல்வதும் எளிதன்று மிகுந்த பக்தி வேகத்தோடு இவர்கள் திருமலையின் முகட்டிற்கு ஏறி அங்கு திருமலைக் குமாரசுவாமி எழுந்தருளியிருக்கும் எளிய நிலைமையைப் பார்த்தார்கள். கவனிக்கப்படாதவாறு தனிமையில் தவித்து கொண்டிருந்த திருமுருகனைக்கண்டு மனம் உருகினார்கள்.

கண் கலங்கினர்கள். பக்தியும், அன்பும் தாய்மை உணர்ச்சியும் சிவகாமி அம்மையாரை ஆட்கொண்டது. தன் செல்வமகன் இக்கொடுங்கானகத்தில் தன்னந்தனியே இருக்கிறனே என்று அமமையார் வேதனையுற்றார். முதலில் என் மகனே! என்றுதான் கூறினர். அன்று திருமலைக் கோயில் திருவிதாங்கூரைச்சேர்ந்த பந்தள மகாராஜவால் கட்டப்பட்ட சிறிய மண்டபமாய் இருந்தது. அம்மன்னர் வழி வந்தவர்கள் போதிய வசதியற்றவர்களாயிருந்ததால் இக்கோயில் பூஜை முதலிய தெய்வப்பணிகள் முடங்கிப் போய்க் கிடந்தன.

திருமலை முருகனைத் தன் குழந்தையாக ஏற்றது:-

இந்த நிலைமையில் திருமலைக் குமாரனைத் தெரிசித்த சிவகாமி அம்மையார் அன்றுமுதலே சிவ குமாரனைத் தான் பெற்றத் தவக் குழந்தையாகக் கருதி அவனைப்பேணுவதும் அவன் உடைமைகளைக்காப்பதும் தன் தலையாய கடமைகள் என செயல்படத் தொடங்கினர். திருமலை அடித்தளத்தில் ஒரு பர்லாங் தூரம் கிழக்கு திசையில் உள்ள வண்டாடும் பொட்டலில் தங்கி இருந்து திருமலைக்குமரனுடைய திருக்கோயிலை விரிவு படுத்தும் திருப்பணியில் தன் கணவருடைய ஒத்துழைப்புடன் ஈடுபடலானர். காவி உடுத்தி, கருத்தையெல்லாம் முருகன் பால் நிறுத்தி வேல் கைக் கொண்டு உலகப்பற்றை அறவே மறந்து துறவியுமானர்.

வசந்த மண்டபம் கட்டியது:-

இன்று நாம் திருமலைக்குமாரனுடைய திருக்கோயிலில் காணும் விசாலமான வசந்த மண்டபம் சிவகாமி அம்மையாரால் நிர்மாணிக்கப்பட்டது. இதற்கான செலவில் பெரும் பகுதியையும் தனது சொந்த உடமைகளை விற்பனை செய்து நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

தவிரவும் அம்மையார் திருமலைக்குமாரன் வீற்றிருக்கும் திருமலையை முருகனுடைய திருவுருவம் கருதி அதிலிருந்து திருப்பணிக்காக ஒரு துண்டு கல் கூட எடுக்கவில்லை. அடுத்துள்ள மலைகளிலிருந்து கல்வெட்டி பணி செய்து முடிக்கப்பட்ட பிரமாண்டமான தூண்களையும், உத்திரங்களையும், 400 அடிக்கும் அதிகமான உயரமுள்ளதும் பல இடங்களில் மிகவும் செங்குத்தானதுமான மலையில் ஏற்றிய விந்தையை இன்றும் அப்பகுதி மக்கள் பக்தி பரவசமாய் பேசிக்கொள்வார்கள். இந்த மண்டபத்தில்தான் சித்திரை மாதம் வசந்த உற்சவம் ஐந்து தினங்கள் சிறப்பாக நடைபெறுகிறது.

கல் தூண்களை மலைமேல் ஏற்றிய வரலாறு :

கல்தூண்களையும், உத்திரங்களையும் மலையின்மேல் இழுத்துச் செல்ல இரண்டு யானைகளுடன் பல நூற்றுக் கணக்கான ஆட்களும் அரும்பாடு பட்டனர். கனத்த மணிலாக் கயறுகள் கிடைக்காத அக்காலத்தில் உத்திரங்களை கட்டி மேலே இழுக்க பனை நாரினால் முறுக்கப்பட்ட வடங்கள் உபயோகிக்கப்பட்டனவாம் இவ்விதம் யானைகளும் நூற்றுக்கணக்கான ஆட்களும் சேர்ந்து தூண்களையும் உத்திரங்களையும் இழுக்கும் போது, சில நேரங்களில் பிடி நழுவியும் கட்டுக்கள் அவிழ்ந்தும் விடுவதுண்டு அத்தூண் அல்லது உத்திரம் நினைக்க முடியாத வேகத்தில் கீழ் நோக்கி உருண்டு வருங்கால் சிவகாமி அம்மையார் தன் உயிரை துரும்பென மதித்து "முருகா! முருகா!!" என்று அலறிக் கொண்டு ஓடோடியும் வந்து தன் தலையைக் கொடுத்துத் தடுத்து நிறுத்துவாராம் மீண்டும் இழுக்கப்படும் வரை, தன் தலையாலேயே தாங்கி அவைகளை அங்கு நிறுத்திய அற்புதச் சாதனையை இன்றும் அப்பகுதி வாழ்மக்கள் பயபக்தியுடன் பேசி பரவசமடைகிறார்கள். மெய்யடியாரின் பெருமையை என்னவென்று சொல்வது.

திருப்பணி வேலையில் பங்கு கொண்டோர் :

இந்த திருப்பணி முயற்சியில் சொக்கம்பட்டி, வீரகேரளம்புதூர் முதலிய இடங்களிலுள்ள குறுநில மன்னர்களும், செல்வாக்கு மிகுந்த சில பக்த பெருமக்களும் அம்மையாருக்கு பேருதவியாய் இருந்தார்கள். அம்மையாரின் கணவர் கங்கமுத்துத் தேவரும், அவருடைய பண்ணையாள் சங்கிலிமாடன் பகடையும், பண்பொழி கிராமத்தில் வீரமறவர் குலத்திலுதித்த திரு மலைக்குமாரு பரதேசியும், அச்சன புதூரில் சேனைத்தலைவர் சமூகத்தைச் சேர்ந்த பழனி மூப்பனரும் அம்மையாரின் கூடவேயிருந்து தெய்வத்திருப்பணி வேலைகளில் பெரும் பங்கு எடுத்து உற்ற துணையாய் இருந்தார்கள்.

வண்டாடும் பொட்டலில் அன்னதானச் சத்திரம் கட்டியது :-

இதுவுமில்லாமல், வண்டாடும் பொட்டலில் அன்ன தானச்சததிரம் ஒன்று கட்டி அங்கு தினம் அகதிகளுக்கு அன்னமிட்டும், கோடைகாலத்தில் நீர்மோர் தானம் செய்தும் வந்தார். இந்த தர்மங்கள் நிரந்தரமாய் நடை பெறுவதற்கு பெருமளவில் நஞ்சை நிலங்களை மானிய மாய் விட்டு வைத்தார். வண்டாடும் பொட்டல் சத்திரத் தில் சிவகாமி அம்மையார் தன் கணவருடன் துறவியாக பல ஆண்டுகள் வசித்துக் கொண்டே இந்த தர்மங்களைச் செவ்வனே நடததி வந்தார்.

திருமலை முருகனது சொத்துக்களை பாதுகாத்த பெருமை :-

இக்காலத்தில் திருமலைக் குமாரசுவாமியினுடைய உடைமைகளை பாதுகாப்பதிலும், அவைகளை விருத்தி செய்வதிலும், திருக்கோயிலில் நித்ய பூஜை திருவிழா வைபவங்கள் சிறப்பாக நடைபெறுவதிலும்

சிவகாமி அம்மையார் கண்ணுங்கருத்துமாய் இருந்தார். கோயிலுக்கு வடக்கு திசையில் பாழடைந்து கிடந்த நிலங்களை பண்படுத்தி செப்பனிட்டு, செழிப்பான நெல் விளையும் கழனிகளாக்கி விட்டார். இந்த நிலங்களுக்கு நீர்ப்பாசான வசதிக்காக தாமரை குளத்தை ஆழமாக்கி கரையைப் பலப்படுத்தி பல மராமத்துக்களை நிரந்தரமான பலன் கொடுக்கும் வகையில் செய்து முடித்தார். இவ்விதம் தன் உடல் பொருள் எல்லாம் திருமலைக்குமானுக்கே அர்ப்பணம் செய்த பெருமாட்டியினுடைய கீர்த்தியும் திருவருள்மாட்சியும் எங்கும் பரவ அன்பர்கள் கூட்டம் கூட்டமாய் சிவகாமிப் பரதேசி அம்மையாரைத்தரிசிக்க தினமும் திரண்டு வரலாயினர். அம்மையார் கரங்களினுல் விபூதி வாங்கி ஆசீர்வாதம் பெறுவதைப் பெரும் பாக்கிய மாகக் கருதிய மக்கள் கூட்டம் மேலும் மேலும் பெருகிக் கொண்டேயிருந்தது. அவ்விதம் தன்னையடைந்த பக்தர் களுக்கு திருநீறு கொடுக்கும்போது வாலர் மஸ்தான் சுவாமி சொல்லியருளிய 'மனம் போல வாழ்வு' என்ற மந்திரத்தை சொல்லியே அம்மையார் ஆசீர்வதித்தார்கள் காவி உடுத்தி கழுத்தில் உத்ராக்ஷமும் தரித்து, கைகளில் வேலாயுதமும், கமண்டலமும் தாங்கி இம்மூதட்டியார் காட்சி அளித்து, பக்த கோடிகளுக்கு அருள் புரிந்து வந்தார். மனித சஞ்சாரம் அற்று காடாய் கிடந்த வண்டாடும்பொட்டலும் திருமலைக்கோயிலும் மெய்யன்பர் கள் மொய்க்கும் திருத்தலமாக மாறியது. அம்மையார் ஏந்திய அற்புத வேலாயுதத்தை இன்றும் வண்டாடும் பொட்டல் சத்திரத்தில் கணலாம்.

திருச்செந்தூர் முருகன் அருள்பெற்று பனைநார் வாங்கி வந்தது:-

திருமலைக்கோயில் வசந்த மண்டப திருப்பணி தீவிரமாய் நடந்து கொண்டிருந்த சமயத்தில் அம்மை யாருக்குப் பல சிக்கல்களை சமாளிக்க வேண்டிய நிர்ப்பந் தம் ஏற்பட்டது. அத்தருணங்களில் முருகப்பிரானே உற்ற

துணைவனாயிருந்து திருவருள் புரிந்திருக்க வேண்டும் கல் தூண்களையும், உத்திரங்களையும் கட்டி மலை மேல் இழுத்துக் கொண்டு போக பனை நார் வடங்கள் மிகுதியாக தேவைப்பட்டனவாம் பனை மரங்கள் மிகுதியாய் வளரும் திருச்செந்தூர் பக்கமே நார் பெருமளவில் கிடைக்குமென்று அறிந்த அம்மையார் ஆண்டவன் அரும்பணி குறித்து திருச்செந்தூர் பயணமானார். அங்கு அப்பொழுது செந்தில் ஆண்டவனுக்கு மாசிமக உற்சவம் நடந்து கொண்டிருந்தது. சிவகாமி அம்மையார் செந்தில் முருகனை சிந்தையுட் நிறுத்திப் பலமுறை தரிசித்து பக்தி மிகக் கொண்டு உள மகிழ்ந்தார். இரதோற்சவத்தன்று தேரில் அழகுற ஆரோகணித்துத் திருவீதி வந்த செந்தில் முருகனைத் தரிசனம செய்யத் திருத்தேரின் எதிரே, அருகே சென்று அமைதியாய் ஐம்புலன் அடக்கி நின்றார். அம்மையார் கண் மூடியாய்க் கை கூப்பிக் கந்தன் கருணைக்குக் காத்து நின்ற அம்மையாரை கோயில் பணியாள் ஒருவன் வெளியே தள்ளி வாய்த்துடுக்காய் பேசியும் விட்டான். சிவகாமி அம்மையார் அகமிக நொந்து. வேதனைப்பட்டார். தேருக்குப்பின் சென்று, நின்று செந்தில் முருகன் தேரில் வீற்றிருக்கும் அழகைக்கண்டு தரிசிக்க முடியவில்லையே என்று கண்ணீர் வடித்தார். பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் முரண்டி இழுத்தாலும் நின்ற இடத்தை விட்டு தேர் நகழவில்லை. பக்தர்கள் பலமுறை முயன்றும் பயனில்லை. தேர் அசையவுமில்லை. அப்பொழுதே தேரில் வீற்றிருந்த சிவாசசரியார் முருகன் அருள் பெற்று என்னுடைய பரமபக்தை எம்பெருமாட்டி தேருக்குப்பின் மனம் கலங்கி நிற்கிறாள். அந்த அம்மையார் வடம் பிடித்து இழுத்தால் நம் தேர் ஓடும் நகரும் என்று சொல்லலானார். அருள் வாக்குக் கேட்ட கோயில் அதிகாரிகளும் அடியார்களும் அம்மையாரைக் கண்டு பிடித்து அவரிடம் மன்னிப்புக் கேட்டனர். முன் நின்று வடம் பிடிக்க வேண்டினர். அம்மையார் வடம் தீண்டவும் ஆறுமுகன் வீற்றிருந்த அழகுத் தேர் அசைந்து ஆடி

Q25:38.2119 N81

அவ்விடம் விட்டு அகன்று சென்றதாம் அம்மையாரின் பெருமை செந்தில் முருகன் திருமுன்னர் பிரபல்யமாக்கப் பட்டது. அம்மையாரின் பக்தியையும், அருட்பணிகளையும் கேட்டறிந்த பக்கத்துக் கிராமங்களில் உள்ள பிரதானி கள் நாட்டாண்மைக்காரர்கள் எல்லோருமாகத் திருமலைக் கோயில் திருப்பணிக்கு உதவ முன் வந்தார்கள். ஒவ்வோர் கிராமத்திலிருந்தும் ஒவ்வோர் வண்டிப்பாரம் பனை நார் அவர்கள் பொறுப்பிலேயே திருமலைக்குக் கொண்டு வந்து கொடுத்தார்கள். இந்நிகழ்ச்சி அம்மை யாரின் இறைபணிக்கு ஏற்ற எடுத்துக்காட்டாயிற்று. அனைவரும் அமமையாரை போற்றவும், புகழவும் தொடங்கினர்கள்.

திருமலைக்குமரன் புளியறையில் உள்ள சொத்துக்கள் பற்றி அம்மையாரிடம் கூறியது :-

இங்ஙனம் சிவகாமி அம்மையார் திருமலைக் குமரனுடைய தொண்டில் ஈடுபட்டிருந்த காலத்தில் எம் பெருமான் ஒரு நாள் பச்சிளங்குழந்தையாய் அம்மை யாரின் கனவில் தோன்றி அம்மா! நீ நாளைக்கு புளியறைக்குப் புறப்படுவாயாக; நீ பிரயாணம் செய்யும் வில் வண்டியை அங்கு நிறுத்தி காளைகளை அவிழ்த்து விடுக; அவை கால்களால் மண்ணைக் கிளைக்கின்ற இடத் தில் நிலத்தை வெட்டிப்பார்த்தால், புளியறையில் எனக்குரிமையான நிலபுலங்களுக்குரிய ஆதாரங்கள் துலங்கும என்று திருவாய் மலர்ந்தருளினன். சிவகாமி அம்மையார் தாம் குழந்தையெனப் போற்றிப் பேணும் திருமலைக்குமாரனின் அன்புக்கட்டளையை சிரமேற் கொண்டு மறுநாளே புளியறைக்குப் பயணமானர். அங்கு போய் முருகப்பெருமான் திரு ஆணைப்படி செயல்படவும காளைகள் குறிப்பிட்ட ஒரு இடத்தில் மண்ணைக் கிளறின வாம். அங்கு பூமிக்கடியில் சுமார் 2 அடி அகலமும் 1 அடி

நீளமும் கொண்ட பெரிய கல் ஒன்று மண்ணில் புதைந்து மறைந்து கிடப்பதைப்பார்த்தார்கள். அதை வெளியே எடுத்து நோக்குங்கால், அதில் ஒரு வேலாயுதமும், மயிலும் பொறிக்கப்பட்டு நிறைய எழுத்துக்களும் செதுக்கப்பட்டிருந்தன. அக்கல் வெட்டு மூலம் புளியறையில் திருமலைக்குமரனுக்காக 160 ஏக்கர் நஞ்சை நிலங்களும், தோப்புத்துறவுகளும் சர்வமான்யமாய் விடப்பட்டிருக்கும் செய்தி வெளிப்பட்டது. மேற்சொன்ன நில புலங்களெல்லாம் அந்த ஊரில் வசித்து வந்த ஒரு ராயரின் ஆளுகைக்குட்பட்டிருந்த விபரமும் சிவகாமி அம்மையாருக்குத் தெரிய வந்தது. தான் குழந்தையென போற்றும் குமாரனின் உடைமைகளை மாற்ருன் அநீதியாய் கைப்பற்றி இருப்பதைக் கண்டு அம்மையார் மனம் கொதித்தார். முருகன் திருவருள் ஒன்றையே துணையாகக் கொண்டு பலம் மிகுந்த எதிரியுடன், தன் குலத்துக்கே உரித்தான வீரிவேசத்துடனும், பேராற்றலுடனும் மன உறுதியுடனும் போராடியும், நீதி மன்றங்களில் வழக்குத் தொடர்ந்தும் பல வருஷங்களாக பெரும் பாடுபட்டார்.

மேற்படி சொத்துக்கள் பற்றிய செப்புப்பட்டயம் நகல் வருமாறு :-

ஸ்வஸ்தி ஸ்ரீ பீகாவோம் 1643 ன் மேல் செல்லா நின்ற கொல்லம் ஸ்ரீ புலனேகவீர சந்திரகுல பிறந்திய மதுரு மகேந்திர செந்தமங்கலாபுரவலாதீசுவர ஜெயமங்கள நாறசிங்குள தமோதிவாகர சோளசிந்துவடவாணல சங்கீதசாயுத்தியா வித்தியாவிஞேத சார்வபூம தேவ பிருமண தாவணசாரிய கோர்சடிலவர ான ஸ்ரீபுவனசக்கிரவர்த்திகளின் கோஞேமை கொண்டான் ஸ்ரீ அழகமழுமாள இறநாதகாலமெடுத்த சீவல வரகுண'ருமருன பாண்டிய குலசேகர தேவதீக்ஷதற்கு ஆண்டு 108 ஆவது செல்லா நின்ற கொல்லம் 867-ம ளு பிலவ ஹூ பங்குனி மீ 4வ சுக்கிரவாரமும் கிருஷ்ணபச்சத்துதுவாதேசியும், உத்திராட நச்சத்திரமும் சுபயோக சுபகரணமும்

பெற்ற சுபதினத்தில் பாண்டாமண்டலம் தெக்ஷண தேசத்துக்கு கர்த்தருன விஜயரெங்க கிருஷ்ண முத்து வீர சொக்கனுத நாயக் ரய்யனவர்கள் காரியத்துக்குக்கர்த் தரான பிரதானி அய்யனவர்களுக்கு புண்ணியமாக அளகப்ப முதலியாரவர்களோம். சுவாமி திருமலைக் குமாரருக்கு சருவமானியமாக உதையமாத்தாண்டங் கட் டளை விட்டுக்குடுத்த நிலம் புளியரையில் தத்துவப்பிரகாச பண்டாரம் பயிரிட்டு வந்த கத்தியூர் திருத்து தன்னம்பி கரிசலுள்படகார் விரை கோட்டை பிசானம் தாமரைக் குளம் கோளிகுண்டி புதுவல் திருத்து தடியுள்பட விரை கோட்டை 35 ஆக கார் பிசானம் விரை 65ல் தத்துவ பிரகாச பண்டாரம் வயலு கார்டனுவிரை 5 போக நீக்கி விரை 6 ம் புளியரை ஆத்துக்கு தெற்கு. சாத்தா பண்டாரத் தெல்லைக்கு மேற்கு, கடை இஞ்சிபத்துக்கும் வடக்கு, தன்னம்பி காலுக்கும் கிழக்கு இந்த நான் கெல்லைக்குள்பட்ட புஞ்சையும் மாவடையும் மறவடையும் ஆயத்துரைக்கு கீழக்குடியிருப்பு, தைத்திருவிளாவுக்கும் 9 5-ம் ளு தை மீ 21 உ விட்டு குடுத்து பண்பிரி ஊர் பரிசை கைத்தடிப்படிகத கார் விரை கோட்டை 20ல் ஷ தாளடி விரை கோட்டை 20-ம், பால்கஞ்சி கட்டளை 1901ம் ளு தை மீ 5 உ விட்டுக்குடுத்தது விரை 1-ம், விஜயதசமி தை திருவிழா மண்டப கட்டளைக்கு விட்டுக்குடுத்தது சுத்தடி ஊர்பத்து சிறுமடை மேடு கைத்தடிப்படிக்கு விரை 2 ம், சூரசங்கார மண்டப கட்டளைக்கு தீக்ஷதரய்யனவர் கள் மணியத்தில் விட்டுகுடுத்தது கைத்தடிப்படி ஊர் பத்தில் விரை $3\frac{1}{4}$ ம், விளாபூசை காலசந்தி கட்டளைக்கு முன் 871-ளு யுவ ஹு பங்குனி மீ 22 வெங்கிடாத்திரி நாயக்கரவர்கள் மணியத்தில் விட்டுக்கொடுத்தது சுத்தடி கீழப்பலாரு முருகமங்கலம் ஊர் சுத்தடி விரை 11-ம், உச்சிக்காலக்கட்டளைக்கு மாயூரநாதபிள்ளையவர்கள் விட்டுக்குடுத்தது திருமலைக்கு வடக்கு தாமரைக்குளம் விரை 12 ம் 878 ளு சித்திரபானு ஹு ஆவணி மீ 12 உ தி வெங்கிடனுத முதலியார் மணியத்தில் திப்பணம்பட்டி

ஊரார் விட்டு குடுத்தது சங்கரமூர்த்திநாடான் குடியிருப்பும், சாணான்புதுக்குளம் நஞ்சையும் விரைப்பம் 8-ம் ஷை நஞ்சை புஞ்சையும் சீவலநாடான் குடியிருப்பு அதினுடனே சொந்த புஞ்சையும் நெரிஞ்சி பரும்புகாட்டு புஞ்சையும் இது முதலானதெல்லாம் சருவமானியமாக தானம் செய்து குடுத்தபடியினாலே சந்திராதித்தர் உள்ள வரைக்கு அர்த்த ஆகாமியநிதி நிச்செபஜெலதருபாசனம் உள்ளதும், சயிதமாக அட்டபோதசுவ மியங்களுக்கு தானுகி விக்கிரயங்களுக்கு திருமலைக்குமாரசுவாமிகோவில் அனுபவித்துக் கொண்டு கோவில் பூசை நெய்வேத்தியம் முதலானதும உதயமார்த்தாண்டம் கட்டளையும் பால் கஞ்சி கட்டளையும், தை திருவளாவும் மண்டகப்படிகளும் தாளவில்லாமல் நடத்திப்பிச்சுக் கொண்டு வருவீராகவும் இந்த தர்மங்களைப் பரிபாலனம் பண்ணின பேர் தெய்வப் பிரதிஷ்டை பண்ணின புண்ணியத்திலே அடைவாராகவும். இதற்கு அதிகம் பண்ணினபேர் மாதா பிதாவுக்கும் குருவுக்கும் அதிகம் பண்ணின தோசத்திலும் கெங்கைக்கரையிலே கோகத்தி பிரமகத்தி திரிகத்தி பண்ணின தோசத்திலேயும் போவாராகவும். இந்த தான சொத்தின்மேலெல்லாம் கையாடி கோவில்தலத்தாரில் பதுனுத சுப்பிரமணிய பட்டரும் தானத்தாரில் விக்கிர பாண்டியஈச்வரபட்டருமாக கட்டளை முதல் அர்த்தசாமம் வரைக்கும் சுவாமிக்கு அபிஷேக நெய்வேத்தியம் திருவிளாவும் தாளவில்லாமல் நடத்தி வருவாராகவும்.

இப்படிக்கு அழகப்பா என்னு எழுதியிருக்கிறது.

புளியறையில் உள்ள முருகன் சொத்துக்களை மீட்டது:—

புளியறைக் கிராமம் அக்காலத்தில் திருவிதாங்கூர் ராஜ்யத்தின் ஒரு பகுதியாய் இருந்தது. எனவே திருவனந்தபுரத்திலிருந்து உயர்நீதி மன்றத்தில் அம்மையாரின் வழக்கு இறுதித் தீர்ப்புக்குப்போயிற்று. பண்பொழியிலிருந்து திருவனந்தபுரம் சுமார் எழுபது

மைல் தொலைவிலிருக்கிறது. சில இடங்களில் மட்டும் மாட்டு வண்டி மூலமும், நெடுந்தூரம், அடர்ந்த கொடிய காடுகளின் நடுவே நடந்தும் பிரயாணம் செய்து அவ்வூர் சென்றார் உயர்நீதிமன்றத்தின் திண்ணையில் நாட்கணக்கில் வசித்து மரச்சீனி புட்டமுதையும், சுட்ட நேத்திரங் காய்களையும் உண்டு வந்தார் சாதாரணமாய் ஒரு ஆண் மகனிடம் காணமுடியாத சாதனையுடனும் சாமர்த்தியத்துடனும், பல இன்னல்களுக்கிடையில் வாழ்க்கை நடத்தினார். முடிவில தன்னுடைய தெய்வத்தன்மையை நீதிபதியாயிருந்த வெள்ளைக்காரத்துறை மகனார் உணருமாறு செய்து வழக்கில் வெற்றிகண்டார். தாவரச் சொத்துக்கள் யாவையும் திருமலைக்குமாரனுக்கு மீண்டும் உரிமையாக்க நீதிமன்றத்தில் தீர்ப்பாகியது.

புளியறை சொத்துக்களை நடைமுறைப் பாத்தியதைக்கு கொண்டு வந்தது :-

அனுகூலமான உத்திரவு பிறப்பிக்கப்பட்டும், நிலங்களைக்கைப்பற்றிப் பல ஆண்டுகளாக அனுபவித்து வந்த ராயர், அவைகளைத் திருமலை முருகனுக்கு விட்டுக் கொடுக்க மறுத்து விட்டார். பணபலமும் செல்வாக்கும் சேர்ந்து இருந்தமையால் கீழ்மட்டத்தில் இருந்த அதிகாரிகள் ராயருக்கு உற்ற துணையாயிருந்தார்கள். அடுத்த ராஜ்யமான திருவிதாங்கூரில் சிவகாமி அம்மையாரைக் கேவலம் ஒரு பரதேசி என்று கருதி எவரும் மதிக்கவில்லை அம்மையார் குமரன் ஆஸ்திகளை கைவசப்படுத்த முயன்றும் பலனில்லை. அருப்பாடுபட்டு வழக்கில் வெற்றி பெற்றும் சொத்துக்கள் தன் ஆளுகைக்கு வரவில்லை என மிகுந்த மன வேதனையடைந்து செய்வதறியாது திகைத்தார். திருமலைக்குமரனுடைய திருவருளை வேண்டினார்.

சொத்துக்களை மீட்க திருமலைக்குமரன் சிவகாமி அம்மையாருக்கு திருவருள் புரிந்தது:-

முருகவேள் சிறு குழந்தையாய் சிவகாமி அம்மையாரின் கனவில் ஒரு நாள்தோன்றி "அம்மையே! நாளை நூறு ஏர்களுடன் புளியறை சென்று நமது கழனிகளில் கால் கொள்ள வேண்டும். முதல ஏரை அம்மையே நடத்திச் செல்க. நானும் துணையாய் நடுவே நிற்பேன்!! என்று திருவாய் மலர்ந்தருளினன்.

அளவற்ற ஊக்கம் பெற்ற அம்மையார் திருமலைக் குமாரனுடைய கட்டளைப்படி நெடுவயல், அச்சன்புதூர் முதலிய ஊர்களில் இருந்து நூறு ஏர்களைத் திரட்டிக் கொண்டு பகலவன் பார்க்கு முன் புளியறைப் போய்ச் சேர்ந்தார். திருமலைக்குமாரனுக்கு உரிய கழனிகளில் ஒரு பகுதியில் உழவு தொடங்கினர். சிவகாமி அம்மையார் முதல் ஏர் பிடித்து, முருகனையே மனதில் தியானித்துக் கொண்டு வீறு நடைபோடும் விடைகளை நடத்திச் சென்றார். அம்மையாருக்குப் பின்னல் அவர் கணவர் கங்க முத்துத்தேவரும் பண்ணையாள் சங்கிலிமாடன் பகடையும் ஏர் நடத்தி வந்தார்கள். செய்தி அறிந்த ராயர் தனது ஆட்களை கம்பு, அரிவாள், கட்டாரி போன்ற பயங்கர ஆயுதங்களுடன் நூற்றுக்கணக்கில் திரட்டி உழவு நடை பெறும் இடத்திற்குக் கொண்டு வந்தார். கலகம் விளை விக்க வந்தகயவர்கள் அம்மையாரையும் அவர்தம் ஆட்களையும் இழிவாகப் பேசி தாக்கவும் ஆரம்பித்தார்கள் மாடுகளை நுகத்தடியுடன் பிணைத்திருந்த கயிறுகளை அறுத்தெறிந்தார்கள். விடுபட்ட மாடுகள் ஆவேசம் கொண்ட பயங்கர காட்டு மிருகங்களைப்போலப் பாய்ந்து பாய்ந்து சென்று ராயரின் ஆட்களைக் கொம்புகளால் தாக்கியும் கால்களால் மிதித்தும் சுற்றிச்சுற்றி விரட்டின. இந்தக் காளைகளின் கொடுமைகளைக் கண்டவர்கள்.

முருகவேளுடைய திருக்கைவேல் அங்கு துள்ளி விளையாடுகிறதோ என்று திகிலடைந்தனர். ராயரும் அவருடைய ஆட்களும் நூற்றுக்கணக்கானவர்களாயிருந்தும், காளைகளுக்கு எதிராக நின்று சண்டையிடத் திறனவற்றவர்களாகச் சோர்ந்து போயினர். தங்கள் உயிர்தப்பினல் போதும் என்று கையிலுள்ள ஆயுதங்களை அங்கங்கே வீசி எறிந்தனர். உயிர் பிழைக்கக் கருதி ஓடி மறைந்தனர். இந்நிகழ்ச்சிக்குப்பின் ராயர், சிவகாமி பரதேசி அம்மையாரின் அருள் வலிமையுணர்ந்தனர் தாம் செய்த தவறையும் உணர்ந்தனர் சிவகாமி அம்மையாரைத் தரிசித்து. விபூதி பெற்றுத் தனது செய்கைகளுக்கு மன்னிப்புக் கேட்டு திருமலை குமாரனுடைய நிலபுலன்களை நிபந்தனையின்றி அம்மையாரிடம் அர்ப்பணித்தனர். அம்மையாரும் திருமலைக்குமாரனுடைய திருவருள் வலிமையை உளமார உறுதிப்படுத்தி அவன் திருவடிகளை வாழ்த்திப் புளகாங்கிதமடைந்தனர். அன்று முதல் புளியறையில் திருமலைக்குமாரனுக்கு உரிய நிலபுலன்கள் யாவும் திருக்கோயில் ஆளுகைக்கு உட்பட்டது. அரும் பாடுபட்டு அம்மையார் மீட்டித்தந்த நிலங்களிலிருந்து இப்பொழுது ஆண்டு தோறும் 1934 கோட்டை நெல்லும் சுமார் 5 லட்சம் ரூபாய் ரொக்க வருவாயும் கிடைக்கின்றன.

திருமலைக்கோவில் மேற்குப் புறம் வாசல் அமைத்தது :-

சிவகாமிப் பரதேசி அம்மையார் இவ்விதம் முருகனுடைய தொண்டில் ஈடுபட்டிருந்த காலத்தில் தன் கணவருடன் வாழ்ந்தாலும் முற்றிலும் துறந்த முழுத்துறவியாகவே இருந்தார். காவி உடுத்துத் துறவுக் கோலம் கொண்டாலும், இந்துப்பெண்களின் ஆசாரத்தை அனுசரிந்து தங்கத்தாலி மட்டும் அணிந்து கொண்டிருந்தார். ஒருநாள் திருமலைக்குமரன் அம்மையாரின் கனவில் தோன்றி "அம்மா! முற்றும் துறந்த உனக்கு

ஏன் இந்தத் தாலி? அதையும் விற்று அந்தப்பணத்தை கொண்டு என் திருக்கோயிலுக்கு மேற்குப்புறமுள்ள திரு மதிலில் குவளைக் சுனையிலிருந்து என் முழுக்காட்டிற்கு நீர் கொண்டு வர ஒரு புதிய வாசல் திறந்து வாய்ப்புச் செய்வாய் என்று அருளினன். முருகன் தன் அடியார்களை ஆட்கொள்ளும் விந்தையை யாரே அறிவார் சூலைக் கொடுத்து அப்பரையும், பாலைக்கொடுத்து சம்பந்தரையும் ஓலை கொடுத்து சுந்தரரையும், இறைவன் தடுத்தாட் கொண்டது போல திருமலை முருகன் சிவகாமியைத் தடுத்தாட் கொண்ட முறை மிகச்சிறப்பானது. அவன் கட்டளைக்கிணங்க தன் திருமாங்கல்யத்தை விற்ற பணத்தைக் கொண்டு எம்பெருமான் திருவுளப் பாங்கின் படி மேற்குப்புறம் வாசல் திறந்தார். அம்மையார் தன்னை யடையத் தாலி தடையாகயிருக்கிறது என்று கந்தவேள் கருதினன் போலும், அம்மையாரிடம் கொஞ்சம் ஒட்டி யிருந்த உலகப் பற்றும் குடும்பப்பாசமும் அந்தத்தாலி யுடன் நீங்கிற்று.

சங்கிலிமாடன் பகடை மண்டபம் கட்டிய வரலாறு:-

சிவகாமி அம்மையார் பல திருப்பணிகள் செய்து முடிப்பதற்குப் பண்ணையாள் சங்கிலிமாடன் பகடை உற்ற துணையாய் இருந்தான். என்று குறிப்பிட்டிருந்தோம். சிவகாமி அம்மையாருடன் எப்பொழுதும் பழகித் தெய்வத் தொண்டுகளில் பங்கு கொண்ட சங்கிலிமாடனும் திருமலை குமாரனிடம் அளவில்லாத பக்திக் கொண்டிருந்தான் தன் பிறப்பின் காரணமாக அக்கால ஆசாரத்தை அனு சரித்து திருமலையைத் தீண்டி மலைமேல் ஏறிச்செல்ல உரிமையற்றவனுயிருந்தான். எனவே எப்பொழுதும் அடிவாரத்தில நின்று கொண்டே திருமலைக்குமாரனை மனக்கண்ணுல் தரிசித்து அவன் அருள் பெற்றிருந்தான் அந்த அருளாளன் தானகவே வேறு யாருடைய உதவியு மின்றி அடிவாரம் வல்லபை விநயகர் கோயிலை அடுத்

துள்ள சிறிய கல் மண்டபத்தைக் கட்டி முடித்துப் புகழ் பெற்ருன் அது இன்றும் சங்கிலிமாடன் மண்டபம் என்று அவன் பெயர் பெற்றுத் திகழ்கின்றது. அக்காலத்தில் திருமலைக்குமாரனுக்கு வழிபாடுகள் நடந்தும் ஹரிஜனங்கள் இந்த மண்டபத்தை உபயோகித்ததாகத் தெரிகிறது.

சிவகாமி அம்மையின் புகழ் :-

திருமலைக்குமாரனுடைய உடைமைகளை விருத்தி செய்தும் அவன் உடைமைகளை அபகரித்தவர்களிடம் போராடி அவைகளைக் கைப்பற்றியும் அவன் திருக் கோயிலை விரிவுபடக் கட்டியும் நித்யபூஜைகள், விழாக்கள் முதலியன சிறப்பாய் நடைபெற நிலையான திட்டங்களும் வகுத்தார். இவை யாவும் நிறைவேறும் வரை சூருவளி வேகத்தில் முருகனுக்குத் தொண்டாற்றி மாதர்குல மாணிக்கம், தேவர்குலத்திலகம் தனது முதிர்ந்த வயதில் சற்று ஓய்வு எடுத்து சதா முருகனைப் போற்றி வாழ்க்கை நடத்தி வந்தார். அம்மையாரின் தெய்வீகத்தன்மை எங்கும் பரவ ஆயிரக்கணக்கில் பக்தர்கள் ஆணும் பெண்ணுமாய், அணி அணியாய் திரண்டு வந்தனர். ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளிக்கிழமையன்று சிவகாமி அம்மையாரையும், திருமலைக்குமாரனையும் தரிசித்து அருள் பெற வந்த பக்த கோடிகள் கூட்டம பெரிதாயிற்று அம்மையார் அடிவாரத்தில் இருந்து கொண்டு தன்னை வணங்கியவர்களுக்கெல்லாம், மனம் போல வாழ்வு என்று வாழ்த்தி திருநீறு வழங்கி அருள்புரிந்து வந்தார். தன் உடைமைகளையும், வாழ்நாட்களையும், முருகன் தொண்டிற்கே அர்ப்பணம் செய்த சிவகாமி அம்மையார் தன் பெயர் என்றும் நிலைத்து நிற்க வேண்டுமென்று ஆசை கொள்ளவில்லை. தான் நிர்மாணித்த கோயில் மண்டபங்களில் தன்னைப்பற்றி யாதொரு குறிப்பும் பொறித்துக் கொள்ளவில்லை. திருமலைக்குமாரன் நாமத்தை எப்பொழுதும் போற்றி வந்த சிவகாமி அம்மை

யார் தன் பெயரையும் மறந்து, தன்னையும் மறந்து காணும் இடமெல்லாம் முருகவேளைக் கண்டு மெய்மறந்து வாழ்ந்த பெண் துறவியாயிருந்தார். சகல லோகங்களுக்கும் தானே தாயும், தகப்பனுமாய்ச் செயலாற்ற வல்ல சிவகுமாரன், படிப்பறிவில்லாத மந்திர உபதேசம், சாஸ்திர ஞானம் முதலிய சிறப்பான தகுதிகள் ஒன்று மில்லாத ஒரு நாட்டுப்புறத்துப்பெண்ணை 'தாயே என்றும்'' அம்மையே என்றும் அன்புடன் அழைத்தான் என்றால் அம்மையாரின் திருவருள் வலிமையை என்னவென்று சொல்வது. எல்லாம் வல்ல முழுமுதற்கடவுள் கயிலாய மலைக்குத்தன்னைக் காணவந்த காரைக்காலில் தோன்றிய புனிதவதி என்பவரை அம்மையே! என்ன வரம் வேண்டி இங்கு வந்தாய் என்று கேட்டார். சிவபெருமானால் அம்மையே என்று அழைக்கப்பட்டதால் அன்று முதல் காரைக்கால் அம்மையார் ஆனார். அதுபோல திருமலை முருகனால் அம்மையே என்று அன்புடன் அழைத்ததால் அன்று முதல் சிவகாமி அம்மையார் ஆனார். குன்றக் குமரன், குழந்தைப் பாலகனே மனமுவந்து தன் தாயாக ஏற்ற பெருமை எண்ணி, எண்ணி இரும்பூறு எய்தத் தக்கது.

இறைவன் திருவடி அடைந்தது :-

திருவருள் மிகுதியால் அறம்பல செம்மையாய் நடந்துவருங்கால், சிவகாமி அம்மையார் தான்முருகனது திருவடிகளில் ஐக்கியமாக வேண்டிய காலம் நெருங்குவதை உணர்ந்தார். திருமலைக்குக் கீழ்புறம், திருமலைக் குமாரன் சன்னதிக்கு எதிராக, வண்டாடும் பொட்டலில் தனக்கு எனச் சிறிய சமாதியை எளிய முறையில் நிர்மாணித்தார். கொல்லம் 1029ம் ஆண்டு வைகாசி மாதம் 28ம் தேதி விசாகமும் கடைசி சுக்கிரவாரமும் சேர்ந்த நன்னாளில் பிற்பகலில் தான் பிறந்த அனுஷ நக்ஷத்திரக் காலில் சந்திரன் பிரவேசித்தவுடன் அமைதியாக சமாதியாகப் போகும் செய்தியை பக்தர்களுக்கும் தன்

கிராமத்து மக்களுக்கும் முன் அறிவிப்பாக தெரிவித்தார். முருகன் அடியார்களை ஆட்கொள்ளும் விந்தையைக்காண குறித்த நாளில் ஆயிரக்கணக்கான மக்கள் அதிகாலையி லிருந்தே கூடி விட்டனர். அன்று காலை சிவகாமி அம்மை யார் நீராடி சிவசின்னங்கள் அணிந்து, சிரமத்துடன் மலை மீது ஏறி திருமலைக்குமாரனையும், மற்றும் எல்லாப் பரி வாரமூர்த்திகளையும் தரிசித்து, இலை விபூதிப் பிரசாதம் பெற்று பக்தியோடு நெற்றியிலணிந்து கந்தவேளிடம் பிரியாவிடை பெற்றுக் கொண்டார். கோயில் பணியாளர் களும், அடியார்களும் கண் கலங்கி நிற்க ஆருத்துயரில் அனைவரும் பேச்சு இழந்த அமைதிச்சூழ்நிலையில் அம்மை யார் மட்டும் முருகன் திருநாமங்களைச் சொல்லிக் கொண்டே, மலையை விட்டிறங்கித் தன் சமாதியை அடைந்தார். திரண்டு நிற்கும் பக்தர்கள் அம்மையாரைக் கடைசி முறையாக வணங்கினர் கண்கலங்கி நின்றனர். அவர்களை அம்மையார் ‘‘மனம் போல் வாழ்வு’‘ என்று ஆசீர்வதித்து கடைசியாக விபூதிப் பிரசாதமும் யாவருக் கும் வழங்கினர்.

அம்மையார் முக்தி பெற்ற நாள் :-

விசாக நன்னாளில் திருமலைக் குமாரனுக்கு உச்சிக் காலப்பூஜை முடிந்ததும் அம்மையார் இரு கைகளையும சிறுமேற் கூப்பி முருகன் திருநாமத்தைச் சொல்லிக் கொண்டே திரண்டு நின்ற அன்பர்கள் கூட்டம் முருகா! முருகா! சிவகாமி ஆத்தா’’! என்று கண்ணீர் விட்டு கதற சங்க நாதம் முழங்க நிறைந்த மனதுடன் சாந்தி தவழும் திருவதனத்துடன், சமாதிக் குழியில் தானே பத்மாசனத் தில் அமர்ந்தார். அவ்வமயம் மூன்றுக் கருடன்கள் சமாதிக்கு மேலே வட்டமிட்டு பறக்கவும், சிவகாமி பர தேசி அம்மையாரின் ‘‘ஆத்மா” ஜோதி ரூபத்தில் வெளி பட்டு விடுதலையாகி முருகன் திருவடித் தாமரைகளில் கலந்தது. இந்த அற்புத நிகழ்ச்சி கொல்லம் 1029ம் ஆண்டு வைகாசி மீ 28-ம் தேதி வெள்ளிக்கிழமை

9B/6-35

(9 6-1854) நடந்தது. முன் ஏற்பாட்டின்படி அம்மையாரின் பூதவுடல் கற்பூரம் சந்தனம் போன்ற நறுமணப் பொருட்களால் மூடப்பட்டது.

இனி இவர் சீவன் முக்தரான தேதியை நிர்ணயிப்போம் சிவகாமி பரதேசி அம்மையார் தனக்கு வயோதிகம் வாய்த்தபோது தான் நடத்தி வந்த வண்டடும் பொட்டல் சத்திரம், மற்றும் கோயில் திருப்பணிகளில் எல்லாம் பெரும் பங்கு எடுத்துக் கொண்ட பண்பொழி பேச்சிமுத்துத் தேவர் மகன் திருமலைக்குமாருப் பரதேசிக்கு மேற்படி அறக்கட்டளைகளுக்காகத் தன்னால் பதிவு செய்யப்பட்ட நிலங்களின் ஆளுமை உரிமையை தக்க ஆவணங்கள் மூலம் மாற்றித்தான் விரும்பியவாறு மேற்காட்டிய நன்னாளில் இறைவனடி சேர்ந்திருக்கிறார். திருமலைக்குமாருப் பரதேசி மேலாண்மைப் பதவியை சுமார் 15 வருஷம் மட்டும் வகித்து வந்ததாகவும், தான் உயிர் நீக்கும் தருவாயில், சிவகாமிப் பரதேசியார் வேண்டிக் கொண்டபடி அந்தச் சொத்துக்களின் மேலாண்மை உரிமையை அம்மையாரின் உறவினர்களான அச்சன்புதூர் அருணாசலத்தேவர், திருவுச்சங்குத் தேவர் திருமலைக்குமாருத் தேவர் இவர்களுக்கு உரிமைப் படுத்தியிருக்கிறார். அவ்விதம் உரிமைப்படுத்தி ஆவணம் பதிவு செய்த தேதி கொல்லம் ஆண்டு 1042 ஆவணி மாதம் 3-ம் தேதி என்று ஆதார பூர்வமாகத் தெரிகிறது.

இந்த ஆவணத்தில் திருமலைக்குமாருப்பரதேசி தான் நோய்வாய்மைப்பட்டமையால் அறக்கட்டளை விசாரணைகளை தன்னால் நேர் நின்று செய்ய முடியவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். இந்த ஆவணம் பிறப்பிக்கப் பட்ட சில மாதங்களில் திருமலைக்குமாருப்பரதேசியும் இறைவனடி சேர்ந்திருக்க வேண்டும் என்ற முடிவு உண்மைக்கு மாறாகாது. எனவே கொல்லம் 1042ம் ஆண்டிலேயே திருமலைக்குமாருப்பரதேசி இறைவனடி சேர்ந்திருப்பாரென்று வைத்துக் கொண்டு, அதிலிருந்து

சுமார் 15 வருடங்களுக்கு முன்பு எந்த ஆண்டில் கடைசி சுக்கிரவாரமும், வைகாசி விசாகமும் அன்று பிற்பகலில் அனுஷ நக்ஷத்திரமும் ஒருங்கே சேர்ந்தது என்று கவனித்தால், கொல்லம் ஆண்டு 1029 வைகாசி மாதம் 28ம் தேதி என்பது துலங்கும் எனவே சிவகாமி பரதேசி அம்மையார் முருகன் திருவடியில் ஐக்கியமாய் ஜீவன் முக்தி பெற்றது மேற் சொன்ன நன்னளில் என்ற முடிவு மாறுபட்ட ஆதாரங்கள் கிடைக்கும் வரை நாம் ஒப்புக்கொள்ளக் கூடியதாகும். இந்தக் கணக்கின்படி அம்மையார் மறைந்து இன்றைக்கு 125 வருஷங்கள் ஆகின்றன.

தொண்டர் தம் பெருமை :-

பக்திவழிச் சென்ற அடியார்கள் இறைவனை இறைவன் என்றும், ஆண்டான் என்றும், வழிபட்டு வணங்கி அவன் திருவடி அடைந்துள்ளார்கள். ஆண்டாள் கண்ணனைக் காதலனுய்ப் போற்றி அவனுடன் ஐக்கியமானுள் தியாகைய்யர் போன்ற பெரியோர்கள் நாதோபசனையால் திருவருள் பெற்ருர்கள் பரமஹம்ஸர் அரவிந்தர் போன்ற மஹான்கள் யோக சாதனையாலும் தவவலிமையினுலும் கடவுளை உணர்ந்தார்கள். பிள்ளைத் தமிழ்பாடிய கவிஞர்கள் இறைவனைக் குழந்தையாகப் பாவிதது கவிபாடி தமிழின்பத்தால் மகிழ்ந்தார்கள். ஆனல் அவர்களுக்கு இறைவனை உண்மையாகவே தன் குழந்தையாக போற்றி உணரும் ஆற்றலும், தவவலிமையும் கிடையாது. இறைவனை, அதிலும் கலியுகவரதனும் கந்தவேளைத்தான் பெற்றெடுத்த குழந்தையென உள்ளன்போடும் தாய்மை உணர்வோடும் போற்றி இரவும் பகலும் அவனை எண்ணி எண்ணி உருகி அவன் திருவடி எய்திய பெருமை சிவகாமிப் பரதேசி அம்மையாரின் தனிச்சிறப்பாகும்.

Q25:38.2197 N81

முடிவுரை :-

சிவகாமி அம்மையாரின் சமாதியில் இன்றும் நித்ய வழிபாடும், வைகாசி விசாக நன்னாளில் குருபூஜையும் நடந்து வருகிறது. இன்று நாம் திருமலை உச்சியில் காணும் கம்பீரமான வசந்த மண்டபம் அம்மையாரின் உளம் நிறைந்த பக்திப் பேராற்றலுக்கும், தெய்வத்திரு வருளுக்கும் சான்றுகளாக விளங்குகின்றது. திருமலை உச்சியிலும், அடிவாரத்திலும், வண்டாடும் பொட்டலிலும் அம்மையாரின் பொன்னை திருவடி தீண்டாத இடமே இல்லை. வசந்த மண்டபத்தில் உள்ள ஒவ்வொரு கல்லும் அம்மையாரின் அரும் பெரும் பக்தியையும் உழைப்பையும் கதை கதையாகப் பேசும், பல பிறவிகள் எடுத்தாலும் ஒரு செல்வச்சீமானை செய்து முடிகக இயலாத அரிய திருத்தொண்டுகளை இப்பெருந்துறவியார் சில வருஷங்களில் சாதித்தாரென்றால், முருகப்பெருமானின் திருவருள் துணையாலும், பேரருள் வலியாலும் மட்டுமே சாதித்திருக்க முடியும் என்பது உறுதி.

‘சிவகாமி அம்மையார் திருப்பேர் வாழ்க!

செவ்வேள் அடியார் திருக்கூட்டம் வளர்க!

சேவல் கொடியோன் திருவருள் பெருகுக!

சுபம்!

220479